

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், இஸ்ரோ தலைவர் மற்றும் விண்வெளித் துறை செயலாளர் டாக்டர் நாராயணன் அவர்கள் சந்தித்துப் பேசினார். இச்சந்திப்பின்போது, சதீஷ்தவன் விண்வெளி மையத்தின் இயக்குநர் டாக்டர் ராஜராஜன், Space Infrastructure Program Office இஸ்ரோ (தலைமையகம்) இயக்குநர் வீரமுத்துவேல், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், தொழில், முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் வர்த்தகத் துறை செயலாளர் வி. அருண்ராய், நீர்வளத்துறை செயலாளர் ஜெ. ஜெயகாந்தன், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை செயலாளர் டாக்டர் இரா. செல்வராஜ் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.05.2025) சென்னை, இராணி மேரி கல்லூரியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், நாடாளுமன்ற உறுப்பினர் பி. வில்சனின் நாடாளுமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 5 கோடி ரூபாய் மதிப்பீட்டில் இராணிமேரி கல்லூரி வளாகத்தில் கட்டப்படவுள்ள கலையரங்கத்திற்கு அடிக்கல் நாட்டினார். இந்த நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை அமைச்சர் சு.முத்துசாமி, உயர்கல்வித் துறை அமைச்சர் முனைவர் கோவி. செழியன், நாடாளுமன்ற உறுப்பினர்கள் திருமதி தமிழச்சி தங்கபாண்டியன், பி. வில்சன், சட்டமன்ற உறுப்பினர் த. வேலு, உயர்கல்வித் துறை செயலாளர் சி. சமயமூர்த்தி, கல்லூரி கல்வி ஆணையர் திருமதி எ.சுந்தரவல்லி, தொழில்நுட்பக் கல்வி ஆணையர் திருமதி. ஜெ.இன்னசன்ட் திவ்யா, இராணி மேரி கல்லூரி முதல்வர் முனைவர் பி. உமா மகேஸ்வரி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்ற கொலை மற்றும் கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்து, களவுச் சொத்துகளை மீட்ட மாவட்ட காவல் கண்காணிப்பாளர், பெருந்துறை காவல் உபகோட்ட துணை கண்காணிப்பாளர், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களை நேரில் அழைத்து வாழ்த்து தெரிவித்து, பாராட்டுச் சான்றிதழ்களை வழங்கினார். இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், காவல்துறை கூடுதல் இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு) செள. டேவிட்சன் தேவாசிர்வாதம் மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறையின் கீழ் செயல்படும் தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரியத்தின் சார்பில் 527 கோடியே 84 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 4,978 புதிய அடுக்குமாடி குடியிருப்புகளை காணொலிக் காட்சி வாயிலாக திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை அமைச்சர் சு.முத்துசாமி, குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ. அன்பரசன், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் திருமதி காகர்லா உஷா. தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் தலைவர் பூச்சி எஸ்.முருகன், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் அன்சுல் மிஸ்ரா, வாரிய இணை மேலாண்மை இயக்குநர் டாக்டர் க.விஜயகார்த்திகேயன் தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின் மேலாண்மை இடக்குநர் டாக்டர் ஜி.எஸ்.சமீரன், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஈரோடு – திருப்பூர் மாவட்டங்களில் கொலை – கொள்ளைச் சம்பவங்கள்! குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்த

# காவல்துறை அலுவலர்களை நேரில் அழைத்து - முதல்வர் பாராட்டு!

## வாழ்த்துத் தெரிவித்து – பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்!

**சென்னை, மே 22-**

**தமிழ்நாடு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டங்களில் நடைபெற்ற கொலை மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட குற்றவாளிகளை விரைந்து கண்டுபிடித்து, களவுச் சொத்துகளை மீட்ட காவல் கண்காணிப்பாளர், உதவி கண்காணிப்பாளர் மற்றும் காவல் துறை அலுவலர்களை நேரில் அழைத்து வாழ்த்துத் தெரிவித்து, பாராட்டுச் சான்றிதழ்கள் வழங்கினார்.**

ஈரோடு மாவட்டம், சிவகிரியில் கடந்த 28.04.2025அன்று உச்சி மேடு மேகரையான் தோட்டம் என்ற இடத்தில் தோட்டத்து வீட்டில் தனியாக வசித்து வந்த ராமசாமி (72) மற்றும் பாக்கியம் (63) ஆகிய வயதான தம்பதியரை கொலை செய்து சுமார் 10 3/4 (பத்தேமுக்கால்) சவரன் நகைகளை மர்ம நபர்கள் கொள்ளையடித்த சம்பவம்;

திருப்பூர் மாவட்டம், அவிநாசிபாளையம், சேமலைக்கவுண்டன் பாளையத்தில் 28.11.2024அன்று இரவு, தெய்வசிகாமணி (78), அவரது மனைவி அலமாத்தாள் (74) மற்றும் அவர்களது மகன் செந்தில்குமார் (44) ஆகியோரை கொலை செய்து, அவர்களிடமிருந்து 5 1/2 (ஐந்தரை) சவரன் தங்க நகைகள் மற்றும் ஒரு மொபைல் போன் ஆகியவற்றை கொள்ளையடித்த சம்பவம்;

மேற்படி கொலை, கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்ட நபர்களை கைது செய்து, விசாரணை செய்ததில் குற்றவாளிகள் இக்குற்ற சம்பவத்தை ஒப்புக்கொண்டனர். மேலும், இக்குற்றவாளிகள் வேறு சில கொலை, கொள்ளை சம்பவங்களில் ஈடுபட்டதாகவும் தெரிவித்துள்ளனர். இவை குறித்தும் தொடர் விசாரணை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இக்குற்றசம்பவங்களை விரைந்து, புலனாய்வு செய்து குற்றவாளிகளை கைது செய்த, காவல்துறை தலைவர் (மேற்கு மண்டலம்) கோயம்புத்தூர் த. செந்தில்குமார், கோயம்புத்தூர் சரக காவல் துணைத் தலைவர் டாக்டர் வி. சசிமோகன், ஆகியோர் தலைமையிலான புலனாய்வு குழுவில் இடம் பெற்ற ஈரோடு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் திருமதி. அ.சுஜாதா, பெருந்துறை காவல் உபகோட்ட துணை கண்காணிப்பாளர் ஆர்.கோகுலகிருஷ்ணன், காவல் ஆய்வாளர்கள், உதவி ஆய்வாளர்கள், தலைமைக் காவலர்கள் மற்றும் காவலர்களை தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் தலைமைச் செயலகத்திற்கு நேரில் அழைத்து பாராட்டி, வாழ்த்து தெரிவித்தார்.

இந்நிகழ்வின்போது, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், உள்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் தீரஜ்குமார், காவல் துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், கூடுதல் காவல்துறை இயக்குநர் (சட்டம் மற்றும் ஒழுங்கு)

செள. டேவிட்சன் தேவாசிர்வாதம், மற்றும் காவல்துறை உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், ஜம்மு–காஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலை தொடர்ந்து இந்தியா மேற்கொண்ட ஆப்ரேசன் சிந்தூர் காரணமாக, ஜம்மு–காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் உயர்கல்வி பயில சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் தமிழ்நாடு திரும்ப இயலாத நிலையில், துரித நடவடிக்கை மேற்கொண்டு பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வந்ததற்காக அம்மாணவ, மாணவியர் தங்களது நன்றியினை தெரிவித்துக் கொண்டனர்.



முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறையில் செயல் அலுவலர் (நிலை–4), தொகுதி–4 நிலையிலான இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 109 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 16 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே. சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

ஜம்மு – காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் உயர்கல்வி பயிலச்சென்ற

# தமிழ்நாட்டு மாணவர்களை பாதுகாப்பாக அழைத்து வரச் செய்த முதல்வருக்கு நன்றி!

## தலைமைச் செயலகத்தில் முதல்வரை – மாணவர்கள் நேரில் சந்தித்து தெரிவித்தனர்!

**சென்னை, மே.22-**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், ஜம்முகாஷ்மீர் மாநிலத்தில் தீவிரவாதிகளின் தாக்குதலை தொடர்ந்து இந்தியா மேற்கொண்ட ஆப்ரேசன் சிந்தூர் காரணமாக, ஜம்மு காஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் உயர்கல்வி பயில சென்ற தமிழ்நாட்டைச் சேர்ந்த மாணவ, மாணவியர்கள் தமிழ்நாடு திரும்ப இயலாத நிலையில், துரித நடவடிக்கை மேற்கொண்டு பாதுகாப்பாக தமிழ்நாட்டிற்கு அழைத்து வரச் செய்ததற்காக அம்மாணவ, மாணவியர் தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.**

கடந்த 22.04.2025 அன்று ஜம்மு காஷ்மீர் ஆனந்த்நாக் மாவட்டத்தில் பைசாரான் பள்ளத்தாக்குப் பகுதியில் தீவிரவாதிகள் மேற்கொண்ட தாக்குதலைத் தொடர்ந்து தமிழ்நாட்டிலிருந்து ஜம்மு காஷ்மீர் மாநிலத்திற்கு சுற்றுலா சென்று தமிழ்நாடு திரும்ப இயலாமல் சிக்கித் தவித்த 154 தமிழர்கள் தமிழ்நாடு அரசின் முயற்சியினால் பாதுகாப்பாக தமிழ்நாடு அழைத்து வரப்பட்டு, அவர்களது சொந்த ஊர்களுக்கு அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வாகனங்கள் மூலம் அனுப்பி வைக்கப்பட்டனர்.

தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து இந்தியா மேற்கொண்ட ஆப்ரேசன் சிந்தூர் காரணமாக, இந்தியா – பாகிஸ்தான் இடையே போர் பதற்றம் ஏற்பட்டது. இதன் காரணமாக, ஜம்முகாஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் வேளாண்மை, தோட்டக்கலை, மீன்வளம், பட்டுவளர்ப்பு, ஆடைவடிவமைப்பு (NIFT), தேசிய தொழில்நுட்ப கழகம் (NIT) உள்ளிட்ட பல்வேறு உயர் கல்வி பயிலும் தமிழ்நாட்டை சேர்ந்த மாணவ மாணவிகள் தமிழ்நாடு திரும்ப இயலாமல் இருப்பதாகவும், அவர்களை பாதுகாப்பாக தமிழ்நாடு அழைத்துவர குடும்பத்தினரிடமிருந்தும், மாணவர்களிடமிருந்தும் கோரிக்கைகள் வரப்பெற்றது.

இதனையடுத்து, முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்களைப் பாதுகாக்கும் முகமாக, புதுடெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் புதுடெல்லி சிறப்புப் பிரதிநிதி ஏ.கே.எஸ்.விஜயன், தலைமையில் சிறப்பு உதவி மையம் தொடங்கப்பட்டது மற்றும் சென்னை அயலகத் தமிழர் நல ஆணையரகத்தில் 24/7 தொலைபேசி மையம் ஏற்படுத்தப்பட்டு மாணவர்களின் மீட்பு பணிகள் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டது.

மேலும், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத் துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர், அயலகத் தமிழர் நலத்துறையுடன் இணைந்து, தமிழ்நாட்டு மாணவர்களை மீட்க நடவடிக்கை எடுத்தார்.

மேலும், புதுக்கோட்டை மாவட்ட கூடுதல் ஆட்சியர் (வளர்ச்சி) அப்தாப் ரசூல், ஜம்முகாஷ்மீர் மாநிலத்திற்கு நேரில் சென்று மீட்பு பணிகளை ஒருங்கிணைத்தார்.

தமிழ்நாடு அரசின் தொடர் முயற்சியின் காரணமாக, ஜம்முகாஷ்மீர் மற்றும் பஞ்சாப் மாநிலங்களில் உயர்கல்வி பயின்ற 242 மாணவர்கள் புதுடெல்லி தமிழ்நாடு இல்லம் மூலம் விமானம் மற்றும் இரயில் வாயிலாக தமிழ்நாடு வந்தடைந்தனர்.

முதலமைச்சர் அவர்களின் அறிவுறுத்தலின்படி, தமிழ்நாடு வந்தடைந்த மாணவர்களை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் மற்றும் அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் ஆகியோர் வரவேற்று, அவர்களது சொந்த ஊர்களுக்கு, அரசு சார்பில் ஏற்பாடு செய்யப்பட்ட வாகனம் மூலம் அனுப்பி வைத்தனர்.

பாதுகாப்பாக தமிழ்நாடு வந்தடைந்த அம்மாணவ, மாணவியர்கள் முதலமைச்சர் அவர்களுக்கு நன்றி தெரிவிக்கும் விதமாக, தலைமைச் செயலகத்தில் முதலமைச்சர் அவர்களை நேரில் சந்தித்து, அரசு எடுத்த உடனடி நடவடிக்கையினைப் பாராட்டி தங்களது நன்றியினைத் தெரிவித்துக் கொண்டனர்.

இந்நிகழ்வின்போது, சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு. நாசர், தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், பொது மற்றும் மறுவாழ்வுத் துறை செயலாளர் திருமதி. ரீட்டா ஹரீஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர். மா.வள்ளலார் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம்

# இந்து சமய அறநிலைய துறையில் - 109 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள்!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்!

*சென்னை,மே.22-*

*முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (20.5.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத்துறையின் அமைச்சுப் பணியில் தேர்வு செய்யப்பட்ட சார்நிலை பணியில் செயல் அலுவலர் (நிலை-4), பணியிடத்திற்கு 29 நபர்களுக்கும், தொகுதி-4 நிலையிலான இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு 44 நபர்களுக்கும், தட்டச்சர் பணியிடத்திற்கு 24 நபர்களுக்கும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் பணியிடத்திற்கு 12 நபர்களுக்கும், என மொத்தம் 109 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக 16 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

*இந்து சமய அறநிலையத் துறை நிர்வாகக் கட்டுப்பாட்டிலுள்ள திருக்கோயில்களை முறையாக பராமரித்தல், சொத்துகளை பாதுகாத்தல் மற்றும் நிர்வகிக்கும் பணிகளை மேற்கொண்டு வரும் செயல் அலுவலர் பணியிடங்களும், துறையின் அமைச்சுப்பணியில் அவ்வப்போது ஏற்படும் காலிப் பணியிடங்களும் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் நிரப்பப்பட்டு வருகின்றன.*

*அந்த வகையில், தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களால், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலம் செயல் அலுவலர் (நிலை-1, நிலை-3 மற்றும் நிலை-4) பணியிடங்களுக்கு 162 நபர்களுக்கும், உதவியாளர் பணியிடத்திற்கு 184 நபர்களுக்கும், இளநிலை உதவியாளர் பணியிடத்திற்கு 80 நபர்களுக்கும், தட்டச்சர் பணியிடத்திற்கு 101 நபர்களுக்கும் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் (நிலை-3) பணியிடத்திற்கு 31 நபர்களுக்கும், என மொத்தம் 558 நபர்களுக்கு ஏற்கனவே பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தால் இந்து சமய அறநிலையத் துறையின் சார்நிலைப் பணியில் செயல் அலுவலர் (நிலை-4), தொகுதி-4 நிலையிலான இளநிலை உதவியாளர், தட்டச்சர் மற்றும் சுருக்கெழுத்து தட்டச்சர் ஆகிய பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 109 நபர்களுக்கு முதலமைச்சர் அவர்கள் நேற்று முன்தினம் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.*

*முதலமைச்சர் அவர்களால் நேற்று முன்தினம் வழங்கப்பட்ட பணிநியமன ஆணைகளையும் சேர்த்து கடந்த நான்காண்டுகளில் இந்து சமய அறநிலையத் துறை சார்பில் மொத்தம் 667 நபர்களுக்கு பணி நியமன ஆணைகள் வழங்கப்பட்டுள்ளன.*

*இந்நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு, தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், சுற்றுலா, பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன், இந்து சமய அறநிலையத்துறை ஆணையர் பி.என்.ஸ்ரீதர், கூடுதல் ஆணையர் டாக்டர் சி.பழனி, மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.*